**செ.வெ.எண்: 559** **நாள்: 01.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**02.10.2021 அன்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து இந்திய தயாரிப்பு அந்நிய மதுபான சில்லரை விற்பனைக் கடைகள் மற்றும் மதுபானக் கூடங்கள் மூடப்பட்டு இருக்க வேண்டும்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு மதுபான சில்லரை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003 விதி எண் 12 மற்றும் அரசு ஆணை எண்.32, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VIII) நாள் 24.05.2013 ன்படி 02.10.2021 அன்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு டாஸ்மாக் நிறுவனத்தின் அனைத்து இந்திய தயாரிப்பு அந்நிய மதுபான சில்லரை விற்பனைக் கடைகள் மற்றும் மதுபானக் கூடங்கள் விடுமுறை என்பதால் விற்பனை நடைபெறாமல் மூடப்பட்டு இருக்க வேண்டும்.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள், மதுபானக்கூடங்கள்(பார்) மற்றும் FL3, ஹோட்டல் பார்கள் ஆகியவற்றில் மேற்கண்ட ஒரு நாள் மட்டும் (02.10.2021) மது விற்பனை ஏதும் நடைபெறாது என்றும், அவையாவும் மூடப்பட்டிருக்கும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**